DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.204/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 4 | நாள் | : | 04.04.2025 |
| பெயர் | : | தெய்வானை | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 04th day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் குலசேகரமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். எனக்கு அருணா, ப்ரியா என்று இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். என் கணவர் இறந்துபோனார். நான் வேறு திருமணம் செய்து கொள்ளவில்லை. லட்சுமணத்துரை என்பவரை எனக்கு தெரியாது. 1 ம் எதிரி குமார் என் தம்பி. 2 ம் எதிரி அவரது மனைவி, 3 ம் எதிரி எனக்கு தம்பி முறையாகும். அ.சா.1 முதல் 3 ஐத் தெரியாது. நான் கற்பாகாம்பாள் மில்லில் வேலை பார்த்தேன். அங்கு லட்சுமணத்துரை வேலை பார்த்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாட்சி சபர்னா என்பவரைத் தெரியாது. பிரிவு 164 ன்படியான வாக்குமூலத்தில் காணப்படும்

கையொப்பம் என்னுடையதுதல்ல எனக்கு கையெழுத்து போட தெரியும். தமிழிலும் கையெழுத்துப்போடுவேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும் நான் கற்பாகாம்பாள் மில்லில் வேலை பார்த்தபோது மலையடிப்பட்டியைச் சேர்ந்த லட்சுமணத்துரை என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது என்றும் நானும், லட்சுமணத்துரை பழகிய விவரம் என் தம்பிக்கும் அவரது மனைவிக்கும் தெரிந்து அவர்கள் என்னை சத்தம்போட்டார்கள் என்றும் இந்நிலையில் மலையடிப்பட்டி கோவில் கொடை விழா முடிந்ததும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று லட்சுமணத்துரை என்னை அழைத்ததால் நானும். 10.08.2021ம் தேதி லட்சுமணத்துரையுடன் மலையடிப்பட்டிக்கு சென்றேன் என்றும் 11.08.2021ம் தேதி குருவிகுளம் கடை வீதிக்கு சென்று துணி எடுத்துவிட்டு வருவோம் என்று கூறி என்னையும், லட்சுமணத்துரை மகள் சபர்னாவையும் அழைத்துக் கொண்டு மாலை 5.45 மணிக்கு அ.சா.1, 2 ம் குருவிகுளம் கடைத்தெருவிற்கு நாகராஜ் ஆட்டோவில் சென்றோம் என்றும் அப்போது கடைவீதியில் அப்போது TN76 D0079 என்ற எண்ணுள்ள இன்டிகா கார் அருகே நின்றிருந்த ராஜேஸ்வரி, தேசிங்குராஜா, குமார் ஆகியோர் மூவரும் எங்களை பார்த்ததும் லட்சுமணத்துரையை பார்த்து ஏலே சிறுக்கிபுள்ளை என்று கூறி ஆட்டோவை பின்தொடர்ந்தார்கள் என்றும் உடனே லட்சுமணத்துரை வேகமாக ஓட்டு என்று சொல்லவும் நாகராஜ் ஆட்டோவை

வேகமாக ஓட்டிச் சென்றபோது காரும் பின் தொடர்ந்து வந்தது என்றும் குருவிகுளம் மீனாட்சியம்மன் கோவில் அருகே சென்றதும் அக்ரஹாரம் தெருவில் கார் எங்கள் ஆட்டோவில் உரசியது என்றும் ஓட்டுநர் ஆட்டோவை நிறுத்திவிட்டார் என்றும், சபர்னாவும், தெய்வாணையும் ஆட்டோவில் இருந்து இறங்கியதும், காரில் இருந்து இறங்கிய ராஜேஸ்வரியும், தேசிங்குராஜாவும் வெட்டிக்கொல்லுங்கள் என்று கூற குமார் தேவிடியா மகனே என்று கூறிக்கொண்டே நீ உயிரோடு இருந்தால் தலை நிமிர்ந்து நடக்க முடியாது செத்துதொலை என்று கூறிக்கொண்டே லட்சுமணத்துரையின் கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும் அதை லட்சுமணத்துரை இடது கையால் தள்ளியபோது காரின் கண்ணாடியில் பட்டு கண்ணாடி நொறுங்கிவிட்டது என்றும் மீண்டும் லட்சுமணத்துரை இடது கையால் தடுத்ததால் உள்ளங்கையில் வெட்டுப்பட்டது என்றும், மீண்டும் வெட்டிய போது லட்சுமணத்துரை தடுத்ததால் வலது முன்னங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அவன் நிலைதடுமாறி கீழே விழுந்தபோது லட்சுமணத்துரை இடது கால் முட்டிக்கு கீழே வெட்டி இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் என்னை ராஜேஸ்வரி, தேசிங்கு ராஜா அடித்தார்கள் என்றும் இளவரசியும், சபர்னாவும், நாங்களும் சத்தம்போடவே மூவரும் அங்கிருந்து அரிவாளுடன் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்றும் அ.சா.1 காயம்பட்ட லெட்சுமணத்துரையை எதிரிகள் விட்டுச் சென்ற காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கரன்கோவில் நீதித்துறை

நடுவர் நீதிமன்றத்தில் போலீசார் என்னை அழைத்துச் சென்ற போது நான் நீதிபதி முன்பு சாட்சியமளித்தேன் என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதால் நான் நீதிபதி முன்பு சாட்சியமளித்ததையே மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கண்முன்னே லட்சுமணத்துரைக்கு ஏற்பட்ட சம்பவத்தை கண்டு எனக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.04 18:15:24 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.204/2024**

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 3 | நாள் | : 04.04.2025 |
| பெயர் | : நாகராஜன் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 04th day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் மலையடிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி வருமானம் ஈட்டி வருகிறேன். அ.சா.1,2 யைத் தெரியும். அ.சா.1, 2 என் அண்ணனும், அண்ணன் மனைவியும் ஆவார்கள். சாட்சி சபர்னா லட்சுமணத்துரையின் மகள் ஆவார். அ.சா.1 ன் உடன் பிறந்தவர்கள் மாடசாமி, லட்சுமணதுரை, ரவி மற்றும் பாப்பாத்தாய் ஆவார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என் அண்ணன் லட்சுமணத்துரை சங்கரன்கோவிலில் அவரது மனைவி தனலட்சுமியுடன் குடியிருந்து வந்தார். என் அண்ணன் லட்சுமணத்துரை டிரைவராக வேலை பார்த்து வந்தார். என் அண்ணன் லட்சுமணத்துரை எப்படி

இறந்துபோனார் என்று தெரியாது. நான் வேலைக்கு சென்றுவிட்டு 12ம் தேதி மாலையில் சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் லெட்சுமணத்துரை இறந்து போய்விட்டதாக கேள்விப்பட்டேன். பிரிவு 164ன்படியான வாக்குமூலத்தில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.4 வரிசையாகும் (11 எண்ணிக்கைகள்) அதை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்துப்போட்டேன் லட்சுமணத்துரையின் மகள் பெயர் சபர்னா. தெய்வானையைத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

நான் போலீசார் விசாரணையில் நான் கடந்த 11.08.2021 மாலை 5.45 மணிக்கு அ.சா.1, 2ம் குருவிகுளம் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்தபோது லட்சுமணத்துரையும் தெய்வானையும், என் அண்ணன் மகள் சபர்னாவும், எனது ஆட்டோவில் ஏறினார்கள் என்றும் அப்போது TN76 D0079 என்ற எண்ணுள்ள இன்டிகா கார் அருகே நின்றிருந்த ராஜேஸ்வரி, தேசிங்குராஜா, குமார் ஆகியோர் மூவரும் என் அண்ணன் லட்சுமணத்துரையை பார்த்து ஏலே சிறுக்கிபுள்ளை என்று கூறி ஆட்டோவை பின்தொடர்ந்தார்கள் என்றும் நான் ஆட்டோவை வேகமாக ஓட்டிச் சென்றபோது காரும் பின் தொடர்ந்து வந்தது என்றும் குருவிகுளம் மீனாட்சியம்மன் கோவில் அருகே சென்றதும் அக்ரஹாரம் தெருவில் கார் என்

ஆட்டோவில் உரசியது என்றும் நான் ஆட்டோவை நிறுத்திவிட்டேன் என்றும், சபர்னாவும், தெய்வானையும் ஆட்டோவில் இருந்து இறங்கியதும், காரில் இருந்து இறங்கிய ராஜேஸ்வரியும், தேசிங்குராஜாவும் வெட்டிக்கொல்லுங்கள் என்று கூற குமார் தேவிடியா மகனே என்று கூறிக்கொண்டே நீ உயிரோடு இருந்தால் தலை நிமிர்ந்து நடக்க முடியாது செத்துதொலை என்று கூறிக்கொண்டே என் அண்ணன் லட்சுமணத்துரையின் கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும் அதை லட்சுமணத்துரை இடது கையால் தள்ளியபோது காரின் கண்ணாடியில் பட்டு கண்ணாடி நொறுங்கிவிட்டது என்றும் மீண்டும் லட்சுமணத்துரை இடது கையால் தடுத்ததால் உள்ளங்கையில் வெட்டுப்பட்டது என்றும், மீண்டும் வெட்டிய போது லட்சுமணத்துரை தடுத்ததால் வலது முன்னங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அவன் நிலைதடுமாறி கீழே விழுந்தபோது லட்சுமணத்துரை இடது கால் முட்டிக்கு கீழே வெட்டி இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் தெய்வானையை ராஜேஸ்வரி, தேசிங்கு ராஜா அடித்தார்கள் என்றும் இளவரசியும், சபர்னாவும், நாங்களும் சத்தம்போடவே மூவரும் அங்கிருந்து அரிவாளுடன் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்றும் அ.சா.1 காயம்பட்ட லெட்சுமணத்துரையை எதிரிகள் விட்டுச் சென்ற காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும் அங்கு வந்த உதவி ஆய்வாளரிடம் அ.சா.1 ஒரு வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதுதான் அவர் கொடுத்த புகார் என்றும், போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. குலசேகரமங்கலம் எங்கே உள்ளது என்று

தெரியாது. நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்கிறேன். எனக்கு எதிரிகளை நன்கு தெரியும் என்றும், என் கண்முன்னே என் அண்ணனுக்கு ஏற்பட்ட சம்பவத்தை கண்டு எனக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.04 18:15:32 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.204/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 2 | நாள் | : | 04.04.2025 |
| பெயர் | : | இளவரசி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 04th day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் மலையடிப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். என் கணவருடன் பிறந்தவர்கள் மாடசாமி, லட்சுமணதுரை, ரவி மற்றும் பாப்பாத்தாய் ஆவார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என் கணவரின் தம்பி லட்சுமணத்துரை சங்கரன்கோவிலில் அவரது மனைவி தனலட்சுமியுடன் குடியிருந்து வந்தார். என் கணவரின் தம்பி டிரைவராக வேலை பார்த்து வந்தார். என் கணவரின் தம்பி கோவில் அருகே வெட்டுப்பட்டுவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 6.45 மணிக்கு வீடு திரும்பியபோது போலீசார் மூலம் தகவல் தெரிந்து மீனாட்சியம்மன் கோவில் அருகில்

சம்பவ இடத்திற்கு சென்றோம் அங்கு யாருமில்லை. என் கணவர் லட்சுமணத்துரையை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாதகவும் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் கேள்விப்பட்டேன். அங்கு வைத்து லெட்சுமணத்துரை இறந்து போய்விட்டதாக கேள்விப்பட்டேன். பிரிவு 164 ன்படியான வாக்குமூலத்தில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.3 வரிசையாகும் (11 எண்ணிக்கைகள்) அதை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்துப்போட்டேன் என் கணவர் தம்பியின் மகள் பெயர் சபர்னா. தெய்வானையைத் தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

நான் போலீசார் விசாரணையில் நான் கடந்த 10.08.2021ம் தேதி எங்கள் ஊர் மலையடிப்பட்டி பேச்சியம்மன் கோவில் கொடை விழாவில் இருந்தபோது லட்சுமணத்துரை தெய்வானை என்ற பெண்ணுடன் அங்கு வந்தார் என்றும் அவரை அவருடன் பேசி பழகி வருவதாகவும், திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் கூறினார் என்றால் சரிதான். இந்நிலையில் 11.08.2021 மாலை 5.45 மணிக்கு நானும், என் கணவரும், குருவிகுளம் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்தபோது லட்சுமணத்துரையும் தெய்வானையும், என் கணவரின் தம்பி மகள் சபர்னாவும்,

நாகராஜனின் ஆட்டோவில் வந்தார்கள் என்றும் அப்போது TN76 D0079 என்ற எண்ணுள்ள இன்டிகா கார் அருகே நின்றிருந்த ராஜேஸ்வரி, தேசிங்குராஜா, குமார் ஆகியோர் மூவரும் என் கணவரின் தம்பியை பார்த்து ஏலே சிறுக்கிபுள்ளை என்று கூறி ஆட்டோவை பின்தொடர்ந்தார்கள் என்றும் ஆட்டோ வேகமாக சென்றபோது காரும் பின் தொடர்ந்து சென்றது என்றும் என் கணவர் அவருடைய தம்பிக்கு எதாவது ஆகிவிடக்கூடாது என்று அவரும், நானும் பின்தொடர்ந்தோம் என்றால் சரியல்ல. குருவிகுளம் மீனாட்சியம்மன் கோவில் வடபுறம் அக்ரஹாரம் தெருவில் சென்றதும் கார் ஆட்டோவில் உரசியது என்றும் ஆட்டோ ஓட்டுநர் ஆட்டோவை நிறுத்திவிட்டார் என்றும், சபர்னாவும், தெய்வாணையும் ஆட்டோவில் இருந்து இறங்கியதும், காரில் இருந்து இறங்கிய ராஜேஸ்வரியும், தேசிங்குராஜாவும் வெட்டிக்கொல்லுங்கள் என்று கூற குமார் தேவிடியா மகனே என்று கூறிக்கொண்டே நீ உயிரோடு இருந்தால் தலை நிமிர்ந்து நடக்க முடியாது செத்துதொலை என்று கூறிக்கொண்டே என் கணவரின் தம்பியின் கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும் அதை என் கணவரின் தம்பி இடது கையால் தள்ளியபோது காரின் கண்ணாடியில் பட்டு கண்ணாடி நொறுங்கிவிட்டது என்றும் மீண்டும் என் கணவரின் தம்பி இடது கையால் தடுத்ததால் உள்ளங்கையில் வெட்டுப்பட்டது என்றும், மீண்டும் வெட்டிய போது என் கணவரின் தம்பி தடுத்ததால் வலது முன்னங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அவன் நிலைதடுமாறி கீழே விழுந்தபோது என் கணவரின் தம்பியின் இடது கால் முட்டிக்கு கீழே வெட்டி

இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் தெய்வானையை ராஜேஸ்வரி, தேசிங்கு ராஜா அடித்தார்கள் என்றும் ஆட்டோ ஓட்டுநரும், சபர்னாவும், நாங்களும் சத்தம்போடவே மூவரும் அங்கிருந்து அரிவாளுடன் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்றும் என் கணவர் காயம்பட்ட லெட்சுமணத்துரையை எதிரிகள் விட்டுச் சென்ற காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும் அங்கு வந்த உதவி ஆய்வாளரிடம் என் கணவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் அதுதான் அவர் கொடுத்த புகார் என்றும், போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. குலசேகரமங்கலம் எங்கே உள்ளது என்று தெரியாது. நான் கூலி வேலை செய்கிறேன். எனக்கு எதிரிகளை நன்கு தெரியும் என்றும், என் கண்முன்னே என் கண் முன்னே என் கணவரின் தம்பிக்கு ஏற்பட்ட சம்பவத்தை கண்டு எனக்கும் என் கணவருக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.04 18:15:39 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.204/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 1 | நாள் | : | 04.04.2025 |
| பெயர் | : | இரத்தினராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 04th day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் மலையடிப்பட்டியில் குடியிருந்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் மாடசாமி, லட்சுமணதுரை, ரவி மற்றும் பாப்பாத்தாய் ஆவார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என் தம்பி லட்சுமணத்துரை சங்கரன்கோவிலில் அவரது மனைவி தனலட்சுமியுடன் குடியிருந்து வந்தார். என் தம்பி டிரைவராக வேலை பார்த்து வந்தார். என் தம்பி வெட்டுப்பட்டுவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 6 மணிக்கு வீடு திரும்பியபோது போலீசார் மூலம் தகவல் தெரிந்து மீனாட்சியம்மன் கோவில் அருகில் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு என் தம்பி

வெட்டுப்பட்டு கிடந்தார். பின்னர் அவரை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். சிறிது நேரத்தில் என் தம்பி உயிர் போய்விட்டது. குருவிகுளம் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டேன். புகார் வாக்குமூலத்தில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ-1 ஆகும். பிரிவு 164 ன்படியான வாக்குமூலத்தில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.2 வரிசையாகும் (11 எண்ணிக்கைகள்) என் தம்பியின் மகள் பெயர் சபர்னா. போலீசார் விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

நான் போலீசார் விசாரணையில் நான் கடந்த 10.08.2021ம் தேதி எங்கள் ஊர் மலையடிப்பட்டி பேச்சியம்மன் கோவில் கொடை விழாவில் இருந்தபோது லட்சுமணத்துரை தெய்வானை என்ற பெண்ணுடன் அங்கு வந்தார் என்றும் அவரை அவருடன் பேசி பழகி வருவதாகவும், திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் கூறினார் என்றும் இந்நிலையில் 11.08.2021 மாலை 5.45 மணிக்கு நானும், என் மனைவியும், குருவிகுளம் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்தபோது லட்சுமணத்துரையும் தெய்வானையும், என் தம்பி மகள் சபர்னாவும், நாகராஜனின் ஆட்டோவில் வந்தார்கள் என்றும் அப்போது TN76 D0079 என்ற எண்ணுள்ள இன்டிகா கார் அருகே நின்றிருந்த ராஜேஸ்வரி, தேசிங்குராஜா, குமார் ஆகியோர்

மூவரும் என் தம்பியை பார்த்து ஏலே சிறுக்கிவில்ல என்று கூறி ஆட்டோவை பின்தொடர்ந்தார்கள் என்றும் ஆட்டோ வேகமாக சென்றபோது காரும் பின் தொடர்ந்து சென்றது என்றும் நான் என் தம்பிக்கு எதாவது ஆகிவிடக்கூடாது என்று நானும் பின்தொடர்ந்தேன் என்றும் குருவிகுளம் மீனாட்சியம்மன் கோவில் வடபுறம் அக்ரஹாரம் தெருவில் சென்றதும் கார் ஆட்டோவில் உரசியது என்றும் ஆட்டோ ஓட்டுநர் ஆட்டோவை நிறுத்திவிட்டார் என்றும், சபர்னாவும், தெய்வானையும் ஆட்டோவில் இருந்து இறங்கியதும், காரில் இருந்து இறங்கிய ராஜேஸ்வரியும், தேசிங்குராஜாவும் வெட்டிக்கொல்லுங்கள் என்று கூற குமார் தேவிடியா மகனே என்று கூறிக்கொண்டே நீ உயிரோடு இருந்தால் தலை நிமிர்ந்து நடக்க முடியாது செத்துதொலை என்று கூறிக்கொண்டே என் தம்பியின் கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும் அதை என் தம்பி இடது கையால் தள்ளியபோது காரின் கண்ணாடியில் பட்டு கண்ணாடி நொறுங்கிவிட்டது என்றும் மீண்டும் என் தம்பி இடது கையால் தடுத்ததால் உள்ளங்கையில் வெட்டுப்பட்டது என்றும், மீண்டும் வெட்டிய போது என் தம்பி தடுத்ததால் வலது முன்னங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அவன் நிலைதடுமாறி கீழே விழுந்தபோது என் தம்பியின் இடது கால் முட்டிக்கு கீழே வெட்டி இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் தெய்வானையை ராஜேஸ்வரி, தேசிங்கு ராஜா அடித்தார்கள் என்றும் ஆட்டோ ஓட்டுநரும், சபர்னாவும், நாங்களும் சத்தம்போடவே மூவரும் அங்கிருந்து அரிவாளுடன் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்றும் நான் காயம்பட்ட என் தம்பியை அவர்கள் விட்டுச்

சென்ற காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும் அங்கு வந்த உதவி ஆய்வாளரிடம் நான் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் அதுதான் நான் கொடுத்த புகார் என்றும், போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. குலசேகரமங்கலம் எங்கே உள்ளது என்று தெரியாது. நான் கொத்தனராக வேலை செய்வதால் பல ஊர்களுக்கும் சென்று வேலை பார்ப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரிகளை நன்கு தெரியும் என்றும், என் கண்முன்னே என் தம்பிக்கு ஏற்பட்ட சம்பவத்தை கண்டு எனக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.04 18:15:46 +0530